முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சிதம்பரம்

**OS No.129/2022**

The Oaths Act 1969(Act.44/1969)-ன் விதிமுறைகளின் படி 10.11.2025 நாளாகிய இன்று முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி Selvi.S.Padmavathi,M.L., அவர்களால் சாட்சியிடம் சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை செய்யப்பட்டார்.

| | | | |
|---|---|---|---|
| தேதி | 10.11.2025 | சாட்சி | வா.சா.1 |
| பெயர். | அருள் | வயது.. | 55 |
| தந்தை பெயர். | நாகப்பன் | கிராமம்.. | நஞ்சைமகத்து வாழ்க்கை |

**சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை ...**

1. நான் நாகப்பனின் மகன். என் தந்தையாருக்கு என்னுடன் சேர்த்து ஒரு அக்கா மற்றும் தங்கை வாரிசு அவர்கள் கனிமொழி, இன்பநிலா ஆகும். அவர்கள் அக்கா முகையூர், தங்கை கொத்தங்குடி கிராமத்தில் வசிக்கிறார்கள். எனது அக்காவிற்கும்,, தங்கைக்கும் நான் இந்த வழக்கு தாக்கல் செய்த விபரம் தெரியும். என் தந்தையார் 2022 இல் இறந்தார். எனது தந்தையாருக்கு இறப்பு சான்றிதழ் தாக்கல் செய்திருக்கிறேன், வாரிசு சான்றிதழ் பெறுவதற்காக மனு செய்திருக்கிறேன். வாரிசு சான்றிதழுக்கு என் தந்தையார் இறந்த பின்பு மனு தாக்கல் செய்திருக்கிறேன். ஆனால் இன்னும் வாரிசு சான்றிதழ் கிடைக்கவில்லை. எனது தந்தை இறப்பு சான்று நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. வாரிசு சான்றிதழுக்காக மனு செய்து எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல.

2. பிரதிவாதி எனக்கு சொந்தம் இல்லை. நானும் பிரதிவாதியும் பக்கத்தில் இருக்கும் ஆனால் வேற வேறு தெருவில் இருக்கிறோம் நான் இருப்பது பெரிய தெரு, பிரதிவாதி இருப்பதும் பெரிய தெரு, எனது வீடும் அவர் வீடும் பக்கத்தில் வளைந்தவகையில் உள்ளது. வழக்கு சொத்து பிரதிவாதி வீட்டிற்கு பக்கத்தில் உள்ளது. வழக்கு சொத்தின் புல எண்.293/2, பட்டா எண்.347/5. வழக்கு சொத்தில் வைக்கோல்போற் உள்ளது, எப்போதில் இருந்து வைக்கோல் போற் அங்கு வைத்திருக்கிறேன் என்றால் சுமார் 10 ஆண்டுகள் இருக்கும். எனக்கு சொந்தமாக நிலம் இல்லை. எனது தந்தையார், சகோதரிகளுக்கு நஞ்சைமகத்து வாழ்க்கை

கிராமத்தில் நிலம் இருக்கிறாதா என்றால் இல்லை. வைக்கோல்போற் வைப்பதற்கு எனக்கு எந்த ஆதார நிலமும் கிடையாது என்றால் சரியல்ல, நான் மாடு வைத்திருக்கிறேன், மாட்டிற்காக வைக்கோல்போற் உள்ளது.

3. வா.சா.ஆ.1, 16.11.1958 தேதியிட்ட கிரய ஆவணம் வழக்கு சொத்திற்குரியது என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ஆவணம் செல்லாயி பெயரில் உள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.1 சான்றிட்ட நகல் என்றால் சரிதான். வா.சா.ஆ.1 அசல் ஆவணம் என்னிடம் இருந்து தொலைந்து விட்டது. அசல் ஆவணம் எனக்கு எவ்வாறு கிடைத்தது என்றால் எனது தந்தையார் கொடுத்தார். எனது தந்தை எந்த வருடம் கொடுத்தார் என்று ஞாபகம் இல்லை. வா.சா.ஆ.1 தொலைந்த ஆவணத்திற்காக காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேனா என்றால் இல்லை அதன் சான்றிட்ட நகல் இருக்கிறது. வா.சா.ஆ.1 என்னால் பெறப்பட்டது எந்த வருடம் வாங்கினேன் என்று ஞாபகம் இல்லை. வா.சா.ஆ.1 அசல் ஆவணத்தை பற்றி எனக்கு தெரியாது என்றால் சரியல்ல, கூரை வீட்டை பிரித்து கட்டும் பொழுது தொலைந்து விட்டது.

4. எனது தந்தையார் அசல் ஆவணத்தை என்னிடம் கொடுக்கவில்லை என்றாலும், வழக்கிற்காக எனது தந்தை அசல் ஆவணத்தை என்னிடம் கொடுத்ததாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 நான் மனு செய்து பெறவில்லை என்றால் சரியல்ல. வழக்கு சொத்தின் விஸ்திரணம் 1 1/2 செண்ட் இருக்கும். பெரிய தெருவில் வழக்கு சொத்து எந்த திசையில் உள்ளது என்றால் வடக்கு திசையில் உள்ளது, அதன் அகலம் 20 அடி, நீலம் 30 அடி இருக்கும். வழக்கு சொத்திற்கு எதிரில் பிரதிவாதியின் வீடு உள்ளது. பிரதிவாதியின் வீட்டிற்கும் எனது வீட்டிற்கும் இடையில் நான்கு வீடுகள் உள்ளது. வழக்கு சொத்திற்கான பட்டா எனது தந்தை நாகப்பன் பெயரில் உள்ளது, எனது பெயரில் பட்டா இல்லை என்றால் சரிதான். எனது தந்தை 2022 இல் இறந்தபிறகு பட்டாவை மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கவில்லை என்றாலும் சரிதான்.

5. பிராதில் பட்டா எனது பெயரில் இருப்பதாக குறிபிடப்பட்டுள்ளது என்றால் பட்டா என் பெயரில் இல்லை எனது தந்தை பெயரில் உள்ளது. 2021 இல் VAO விடம் வழக்கு சொத்து பொறுத்து அடங்கல் வாங்கியிருக்கிறேன் என்றால் சரிதான். 2021 க்கு முன்பு அடங்கல் கேட்டிருக்கிறேனா என்றால் இல்லை. 2021 இல் அடங்கல் வாங்குவதற்கு என்ன அவசியம் ஏற்பட்டது என்றால் பிரதிவாதி வழக்கு சொத்தை அபகரிக்க முயற்சி செய்ததால் 2021 இல் அடங்கல் வாங்கினேன். அது வரை அடங்கல்

எனது தந்தை பெயரில் இருந்தது. 1958 இல் வழக்கு சொத்து எனது பாட்டி பெயரில் கிரயம் வாங்கியதற்கு பிறகு கிராம முக்கியஸ்தர்கள் முன்பு கிராம வழக்கப்படி 1989 இல் பிரதிவாதி எனது தந்தையாரிடம் இருந்து ரூ.900/- கொடுத்து கிரயம் பெற்றுவிட்டார் என்றால் சரியல்ல , எனது அப்பா கிரயம் கொடுத்திருந்தால் எங்கள் மூவரிடம் சொல்லியிருப்பார். அதனால் தான் 2021 வரை VAO விடம் அடங்கல் எதுவும் பெறவில்லை என்று சொன்னால் சரியல்ல. எனது தந்தை 2021 இல் உடல்நிலை சரியில்லாமல் இருந்தார் என்றாலும், பிரதிவாதி ஆக்கிரமிப்பதாக கூறி வழக்கு போடுவதற்காகவே 2021 இல் அடங்கல் பெற்றேன் என்று சொன்னால் சரியல்ல.

6. வழக்கு சொத்திற்கு VAO விடம் சிட்டா வாங்கினேன் வா.சா.ஆ.3 என்று சொன்னால் நான் சிட்டா வாங்கவில்லை, சிட்டாவும் அடங்கலும் ஒன்று தான். வா.சா.ஆ.2 அடங்கல் 2021 இல் பெறப்பட்டது என்றால் சரிதான், வா.சா.ஆ.3 சிட்டா 2022 இல் பெறப்பட்டது என்று சொன்னால் நான் சிட்டா வாங்கவில்லை. வா.சா.ஆ.2,3 உண்மை இல்லை என்றாலும் வழக்கிற்காக பெறப்பட்டது என்றாலும் சரியல்ல. வா.சா.ஆ.5 அசல் என்னிடம் உள்ளது, அதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யமுடியும். வா.சா.ஆ.5 நகல் என்பதால் ஏற்றுக்கொள்ளமுடியாது என்றால் சரியல்ல. நான் கூலி வேலை செய்கிறேன். நான் குடும்பத்துடன் வசிக்கும் வீடு என் பெயரில் தான் உள்ளது. பிரதிவாதி விவசாயம் செய்கிறார். பிரதிவாதிக்கு சொந்தமாக நிலம் உள்ளது. பிரதிவாதிக்கு 3 காணி நிலம் இருக்கும்.

7. எனக்கும் பிரதிவாதிக்கும் பேச்சுவார்த்தை தற்போது இல்லை. வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பும் பேச்சுவார்த்தை இல்லை. கடைசியாக பிரதிவாதியிடம் எப்போது பேசியிருப்பேன் என்றால் சுமார் 20 வருடம் இருக்கும், பிரதிவாதியிடம் நான் பேசியே 20 வருடம் இருக்கம் என்று சொல்வதால் எனது தந்தை இறந்த பிறகு பிரதிவாதி என்னிடம் வழக்கு சொத்தை கிரயம் கொடுக்க கேட்டார் என்று சொல்வது பொய் என்றால் சரியல்ல. பிரதிவாதி எனது தந்தையிடம் இருந்து இடத்தை கிரயம் பெற்றுவிட்டார் என்றாலும் கடந்த 30 வருடங்களாக பிரதிவாதி தான் வழக்கு சொத்தை அனுபவித்து வருகிறார் என்று சொன்னால் சரியல்ல. பிரதிவாதி விவசாய பணிகளுக்காக வண்டி மாடு வைத்து பிழைத்து வருவதால் வழக்கு சொத்தில் அவர் தான் வைக்கோல் போற் வைத்து அனுபவித்து வருகிறார் என்று சொன்னால் சரிதான்.

8. எனது தந்தை பிரதிவாதிக்கு கிரயம் கொடுத்ததால் தான் 20 வருடமாக பிரதிவாதியிடம் எங்களுக்கு எந்த பிரச்சனையும், பேச்சுவார்த்தையும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. அதனால் எனது தந்தை இறந்த பிறகு நான் மட்டும் தனியாக வழக்கை தாக்கல் செய்திருக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல, வழக்கு சொத்தில் வேளி இருந்ததாகவும் அதனை பிரதிவாதி பிரித்து விட்டதாகவும் பொய்யாக சொல்லியிருக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. வழக்கு சொத்தில் வேலி உள்ளதாக பிராதில் எங்கேயும் குறிப்பிடவில்லை என்றால் வேலி இருந்தது, வழக்கு சொத்திற்கு என் பெயரில் உள்ள எந்த ஆவணமும் தாக்கல் செய்யாததால் வழக்கு நிலைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல நான் அனைத்து ஆவணங்களும் தாக்கல் செய்திருக்கிறேன். 1989 இல் இருந்து பிரதிவாதியிடம் தான் வழக்கு சொத்து இருக்கிறது என்றால் சரியல்ல. எனது தந்தை இறந்த பிறகு நான் தான் வழக்கு சொத்தை அபகரிப்பதற்காக பிரதிவாதியிடம் பிரச்சனை செய்து வழக்கு தாக்கல் செய்திருக்கிறேன் என்றால் சரியல்ல.

**சாட்சி விசாரணை முடிவுற்றது. மறு விசாரணை இல்லை.**

Typed to my dictation in open court read over to the witness and acknowledged by him/her to be correct.

Sd/-S.Padmavathi,
Principal District Munsif
Chidambaram.